# இரட்சகரண்டைக்கே வா!

நான் கிறிஸ்தவளாய் வந்த வரலாற்றைக் குறித்துச் சுருக்கமாய் எழுதும்படி என் சிநேகிதர் ஒருவர் என்னிடம் கேட்டிருந்தார். அவருடைய கேள்விக்கிசைந்து இச் சரித்திரத்தை எழுதுகிறேன். என்னை உடையவரும் நான் தொழுபவருமாகிய என் அருமையான இரட்சகர், தமது கிருபைக்கும் இரட்சிக்கும் திறமைக்கும் சாட்சியாக இதனை ஆசீர்வதிப்பாராக. நான் இற்றைக்கு ஒன்பது வருஷங்களுக்கு முன் என் சிநேகிதருடனே வாசம்பண்ணும் நோக்கமாக அவுஸ்திரேலியா தேசத்துக்கு வந்தேன். எனது சொந்ததேசத்திலே சில தொல்லைகள் எனக்கு நேரிட்டிருந்தபடியினால், அவைகள் என் மனதை விட்டகலும்படி சிலகாலம் பிறதேச வாசம்செய்வது உத்தமமாகுமென்று என் அருமையான பெற்றோர் எனக்கு யோசனை சொன்னார்கள்.

குலாசாரத்தால் நானும் என் பெற்றோரும் நெடுங்காலந் தொடங்கி யூதர்களாயிருக்கிறோம். நான் தெய்வபக்தியுள்ள பெற்றோரால் செவ்வையாய் வளர்க்கப்பட்டேன். நான் என் பிதாவை விட்டுப் பிரிந்த கடைசி நேரத்தில் அவர் என்னுடன் பண்ணின பிரார்த்தனையை ஒருக்காலும் மறக்கமாட்டேன். அவர் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களின் தேவனுக்கு என்னை ஒப்புக்கொடுத்துச் சகல தீமைக்கும் நீங்கலாக்கி என்னை மீட்ட தூதனானவர் என்னை ஆசீர்வதிக்க வேண்டுமென்றும் பிரார்த்தித்தார்.

நான் பிதாவின் அருமையான ஆசீர்வாதத்தைப் பெற்ற பின்பு, கப்பல் யாத்திரை செய்து ஒரு ஓய்வுநாட் சாயுங்காலம் அவுஸ்திரேலியாக் கரையையடைந்து நான் போக வேண்டிய இடத்திற் சேர்ந்தேன். அந்நேரத்திலே அவ்விடத்திற் சிலர் விருந்துகொண்டாடக் கண்டு அவர்களுடன் கூடி நானும் மிக மகிழ்ச்சியுடையவளாயிருந்தேன். பன்னிரண்டு மாசங்களாக அங்குள்ள எவ்வகை ஆடம்பர விநோதங்களிலெல்லாம் நானும் பங்குபற்றிக் கொண்டேன். அலங்கார ஆடை ஆபரணங்கள் தரித்து ஆடல் பாடல்களுக்குச் சென்றேன். ஒரே சொல்லிற் சொன்னால் என் சிந்தை முழுவதும் அவ்விடத்திலுள்ள சகல சிற்றின்பங்களிலும் அமிழ்ந்திவிட்டது. இப்படியிருக்குங் காலத்தில் ஓர் துரைமகனைக் கண்டு அவர்பேரில்

அன்புகொண்டேன். நாங்கள் ஒருவரையொருவர் உருக்கமான நேசம் பூண்டாலும் விவாகம்பண்ணிக்கொள்வதோ சங்கடமாயிருந்தது. அவரோ ஒரு கிறிஸ்தவன், நானோ மனமும் நடையும் ஒத்த ஓர் சூத்திர ஸ்திரீ. ஆதலால் விவாகம் செய்தல் கூடாமையாயிருந்தது. இப்படிச் சிலகாலம் சென்றபின்பு கடைசியில் அவரை விவாகம்பண்ணவே சம்மதித்துக்கொண்டேன். இந்த விவாகத்தால் எனக்கு அருமையான யாவரையும் விட்டுப் பிரியவேண்டிவருமென்றும் என் ஆசாரத்துக்கு ஓர் வடு உண்டாகுமென்றும் நான் அறிந்தும் விவாகம்பண்ணவே தீர்மானம்பண்ணினேன். நான் விவாகம்பண்ணுமுன்னம் என் புருஷனை நோக்கி: என்னை உமது சமயத்தில்வரும்படி நீர் ஒருநாளும் நெருக்கல் கூடாதென்று வாக்குப்பண்ணுவித்துக்கொண்டேன். இந்த வாக்குடன் எங்கள் விவாகம் சம்பூரணமாய் நிறைவேறிற்று. என் புருஷன் எனக்கு எல்லாவற்றிலும் எல்லாமாயிருந்தபடியால் ஒரு குறைச்சலும் எனக்கிருந்ததில்லை. தேவன் எங்களுக்கு இரண்டு அருமையான குழந்தைகளை அநுக்கிரகித்தார். நான் நம்பாத சமயகாரியங்களை அப் பிள்ளைகளுக்குப் போதிப்பது எப்படியென்பதன்பேரில் என் மனம் பட்ட துயர் தேவன் ஒருவருக்கே தெரியும். என் நாயகன் பேரிற் கொண்ட அன்பினிமித்தம் என் பிள்ளைகள் தம் பிதாவின் மார்க்கத்திலே பயிற்றப்படவேண்டுமென்று நான் என் மனதிற் றீர்மானம்பண்ணிக்கொண்டேன். நான் ஒழுங்காய்த் தேவாலயத்துக்குப் போய் வந்தும் என் இருதயமோ மாறுதலடைந்ததில்லை. இயேசுவே என்னிரட்சகரென்று நான் ஒருகாலும் நினைத்ததில்லை. என் இரண்டாம் பிள்ளை பிறந்தபின்பே நான் கிறிஸ்தவளாக வேண்டும் என்ற ஆசை என் மனதில் நுழைந்தது. ஆ! ஆண்டவரே! சரியென்று கண்டால் நான் இயேசுவை நம்பும்படி எனக்குக் கிருபை அருள்வீராகவென்பது அக்காலத்தில் என் நித்திய பிரார்த்தனையாயிருந்தது. நான் கிறிஸ்தவளாக வேண்டுமென்று மெய்யாய் ஆசித்தும் என் முழு இருதயத்தினால் நான் தேவனைத் தேடவில்லை. என் நாயகனும் பிள்ளைகளுமே என் தெய்வம் என்று பாவித்துக்கொண்டேன். இப்படியிருக்கும் காலத்தில் நான் தாங்குதற்கரிய ஒரு உபத்திரவம் எனக்கு நேரிட்டது.

என் நாயகன் சடுதியாய் என்னை விட்டுப் போய்விட்டாரென்று நினைக்கக் கூடாத அவ்வளவு சடுதியில் அவர் இறந்துவிட்டார். இம்மையில் நான் அவரைச் சந்திக்கக் கூடுமென்ற ஒரு நம்பிக்கை யென்னிடமிராதிருந்தும் அவர் இயேசுவின் மேற் கொண்ட விசுவாசத்திலே இறந்துவிட்டாரென்று நான் நன்றாய் அறிந்திருந்தேன். ஆயினும் நானோ பின்னும் கிறிஸ்துவண்டை சேராமல் அவிசுவாசியாகவே இருந்தேன். தேவன் என்னைக் குரூரமாய் நடத்தி என் ஜீவியத்தின் சிறப்பையும் பிரபையையும் வாங்கிப்போட்டாரென்று மிகவும் விசாரமுள்ளவளாயிருந்தேன். இனிமேல் இப் பிரபஞ்ச வாழ்வு வீண் என்று நினைத்து என் அன்பருடன் போய்விடும்படியாகவே ஆசித்தேன். அநேக தருணங்களில் என் நாயகனுடைய கல்லறையின்மேல் ஈரமானநிலத்திற் படுத்திருந்து என்னையும் எடுத்தருளும் என்று தேவனிடத்தில் வேண்டுதல் பண்ணினேன். நான் இரட்சகரண்டைக்குச் செல்லாமற் றூரப்பட்டிருந்தபோதிலும் தேவன் என்மேல் இரக்கம்வைத்து அரிய சிநேகிதரை எனக்கு ஏற்படுத்தினார். என் நாயகனைக் காண்பதற்கு ஒரேயொரு வழிமாத்திரமுண்டென்று அச் சிநேகிதர் மூலமாக உணர்ந்துகொண்டேன். கிறிஸ்தவளாகவேண்டும் என்னும் வாஞ்சை என் உள்ளத்திற் குடிகொண்டது. அரைமனதுள்ளவளாகாமல் என் முழுமனதாலும் ஆண்டவரைத் தேடத் தொடங்கினேன். முழு இருதயத்தாலும் நீங்கள் என்னைத் தேடும்போது கண்டடைவீர்கள் என்னும் தேவவாக்கு என்னில் மெய்ப்பட்டது. ஒருநாள் நான் இயேசுகிறிஸ்து பாடுபட்ட பழைய சரித்திரத்தை வாசித்துக்கொண்டிருந்தபோது, இப் பாடுகளெல்லாம் உனக்காகவே அவர் பட்டாரென்று ஏதோ வந்து என் இருதயத்திற் சொன்னதுபோலிருந்தது. அந்தச் சத்தியம் ஒரு மின்னலைப் போலச் சடுதியாய் என் மனதில் உதித்தவுடன் அந்த இரட்சகரையே என் ரட்சகராக்கிக்கொண்டேன். இதனால் என் இருதயத்திற் பெருகிய வெள்ளம்போலும் அன்பினளவை இம்மாத்திரமென்று சொல்ல என்னால் முடியாது. இவ்வாறு இரட்சகர்பேரில் என் அன்பு பெருக்கெடுத்தவுடன் நான் என் அறைக்குச் சென்று முழந்தாளினின்று துக்கத்தினாலல்ல, சந்தோஷத்தினால் உரத்து

விம்மி அழுதேன். இரட்சகர் எனக்கு எவ்வாறிருந்தார் என்பதைச் சொல்ல, என் ஒரு நாவால் முடியாது.

எனக்கு நேரிட்டிருக்கிற சோதனைகள் எல்லா விழுங்கத் தக்கவைகளாயிருந்தும் நான் இரட்சகரைத் தழுவிக்கொண்டது முதல் இதுவரைக்கும் ஒரு நிமிஷமும் அவர் பேரில் நம்பிக்கையீனங்கொண்டதில்லை. என் நாயகனைத் தேவன் எடுத்துக்கொண்டாலும் தம் குமாரனை அருளிய தயவுக்காக நான் அவருக்கிஸ்தோத்திரஞ்செலுத்துகிறேன்.

என் இயேசுநாதர் எனக்குத் தூரப்பட்டவராயிராமல் சமீபமாய் என் தஞ்சமாயிருக்கிறார். அவர் ஒருபோதும் என்னைக் கைவிடார். இந்த அருமையான இரட்சகரை ருசிபார்த்திருக்கும் எவர் கையிலேனும் இச் சரித்திரம் அகப்படுமானால் முழு இருதயத்தினாலும் அவரை நம்ப வேண்டுமென்று ஆவலோடும் பிரார்த்தனையோடும் வேண்டிக்கொள்ளுகிறேன். கிறிஸ்தவளாகுமுன்னே மெய்யான மனப்பாக்கியம் யாதென்று நான் அறிந்ததில்லை, எப்போதுங் குறைவுள்ளவளாகவேயிருந்தேன். இரட்சகரை அறிந்தபின்போ எல்லாம் எனக்கு நிறைவாயின.

இதை வாசிக்கும் என் அஞ்ஞானச் சிநேகிதனே! எனக்கிருந்த குறைவு உனக்கில்லையா? ஆ! என் நேசனே! உன்னைத் திருப்தியாக்கி நிறைவாக்கவல்ல ஒருவரை உன் இரட்சகராகப் பற்றிக்கொள் என்று உன்னை வேண்டிக்கொள்ளுகிறேன். இஸ்ரவேலருடைய வருத்தங்களையும் தொல்லைகளையும் கேட்டிரட்சித்த அவரே உனக்காகக் கல்வாரி மலையிற் சிலுவையில் அறையுண்டிறந்தார். அவருடைய அழைப்புக்கு நீ பின்னிட்டால் நேரிடும் நித்திய தண்டனை யாது என்று நினைத்துப்பார். பாவத்தினிமித்தமல்ல, தேவசுதனை வேண்டாம் என்று நீ மறுப்பதினால் மெய்யாய்க் கெடுவாய்! கெடுவாய்! கெடுவாய்! யேசுவை உன் இரட்சகராகப்பற்றிக்கொள்ளாவிட்டால் இரட்சிப்பு அடையவுமாட்டாய். தேவசமுகத்துக்கு ஏற்றவனாகவுமாட்டாய். பாவத்தினால் நீ நித்திய ஆக்கினைக்குத் தீர்க்கப்பட்டிருக்கிறாய். நேசனே! தேவனானவருக்குச் செவிசாய். அவருடைய சுதனாகிய இயேசுகிறிஸ்துவினிரத்தம் சகல பாவங்களினின்றும் நம்மைச் சுத்திகரிக்கும். இரட்சகரிடத்தில் இக் கிஷணமே வா! வா!

---

Strong and Asbury Printers, Manippay, 1887.
First Edition, 5,000.